**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்: 14.11.2022 திங்கட்கிழமை
O.S.No.06 /2019 PW1: அகிலாண்டேஸ்வரி

**(சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)**

முதலாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பானர் பெயர் ஆறுமுகம். அவர் எப்போது இறந்தார் என்று ஞாபகம் இல்லை. 40 வருடங்கள் இருக்கலாம். வழக்கு சொத்தில் வீடு கட்டி 50 வருடங்கள் இருக்கும்.எனது அம்மா கிரையம் வாங்கும் போது அந்த இடம் காலிமனையாக தான் இருந்தது. 1979 ல் தான் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பிறகு தான் அந்த இடத்தில் வீடு கட்டினார்கள் என்றால் சரியல்ல. அந்த வீடு கட்டும் போது எனக்கு வயது 6 என்றால் சரியல்ல. 9 வயதிருக்கும். எனக்கு பிறகு தான் என் சகோதரிகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். வீடு கட்டிய சமயத்தில் எனது அப்பாவுக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல.எனது அண்ணன் ரைஸ்மில்லில் வேலை பார்த்து அந்த சமயத்தில் சம்பாதித்து வந்தார் என்றால் சரியல்ல. வீட்டில் தான் இருந்தார். எனது அம்மா வீட்டு குடித்தனம் என்றால் சரியல்ல அவர் நெல் வியாபாரம் செய்து வந்தார். அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் வியாபாரம் செய்ததை நிரூபிக்க முடியும். 1 ம் பிரதிவாதிதான் அவரது அப்பா துணையுடன் ரைஸ்மில்லில் வேலை பார்த்து கட்டினார் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கும் வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பத்திரம் எழுதும் போது உள்ளூர்காரர்கள், சொந்தகாரர்கள் செல்வார்கள் என்றால் பக்கத்து வீட்டுக்காரர்களை அழைத்து சென்றோம். உயில் எழுதும் காலத்தில் எனது அம்மா உடல் நிலை சரியில்லாமல் இருந்தார்கள் என்றால் சரிதான். திருப்பஞ்சிலியில் வழக்கு சொத்தில் இருந்த எனது தாயாரை மண்ணச்சநல்லூருக்கு அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. எனது தாயாரின் உடல்நிலை சரியில்லாத நேரத்தில் மோசடியாக உயில் ஆவணத்தை எழுதியிருக்கிறோம் என்றால் சரியல்ல. உயில்

ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் யார் என்றால் ஒருவர் பெயர் ராமச்சந்திரன் இன்னொருவர் பெயர் ஞாபகம் இல்லை. உயில் எழுதிய இடத்திற்கு நாங்கள், வாதிகள் மூன்று பேரும் சென்றிருந்தோம். எனது சகோதரி காமாட்சியின் கணவர் பெயர் ரவி. ராமச்சந்திரன் பக்கத்து வீட்டுகாரர். அவர் பெயர் ராஜேந்திரன் என்றும் அவர் பெயர் கூட தெரியாமல் நாங்கள் உயிலை தயாரித்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் தான் சாட்சிகளை அழைத்து வந்தோம். இன்னொரு சாட்சி புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர்களுக்கு என் அம்மா யார் என்ற விபரம் அவருக்கு தெரியாது என்றால் சரியல்ல. எழுத்துக்காரரை பார்த்து நானும் எனது சகோதரிகளும் உயிலுக்கு விபரம் சொன்னோம் என்றால் சரிதான். அதன் பிறகு தான் எனது அம்மாவை அழைத்து வந்து ரேகை வைக்க சொல்லி ஆபிசில் கொடுத்தோம் என்றால் சரிதான். ஆபிசுக்கே அழைத்து சென்றோம்.எனது அம்மா ரேகை வைத்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று என் அம்மாவுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது அம்மா உயிலுக்கு விபரம் சொல்லவில்லை என்றும் என்ன ஆவணம் என்று சொல்லாமல் நாங்களே உயிலை தயாரித்து விட்டோம் என்றால் சரியல்ல. உண்மையில் என் தாயார் உயில் எழுதியிருந்தால் தனக்கு எத்தனை பிள்ளைகள் என்பதையும் எதனால் எங்களுக்கு உயில் எழுதி வைக்கிறார் என்பதையும் வழக்கு சொத்தில் யார் எப்போது வீடு கட்டினார்கள் என்ற விபரத்தையும் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகும் 1ம் பிரதிவாதி தாயாரை பராமரித்து கொண்டு வழக்கு சொத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரர் கேசவன் இறந்த போது தான் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு வந்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு நான் தான் காரியம் செய்ததாக சொல்வது பொய் என்றும், 1ம் பிரதிவாதி செய்தார் என்றும் அதற்கான செலவை நான் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காரியங்கள் முடிந்த பிறகு உயில் பற்றி சொல்லி 1ம் பிரதிவாதியிடம் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. இதனால் 1ம் பிரதிவாதி மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தார் என்றால் எங்கள் கணவர்கள் மீது புகார் கொடுத்தார். அப்போது அசல் உயிலை காவல் நிலையத்தில் காண்பித்தோம் என்றால் சரிதான். சொத்து பிரச்சினை நாங்களே தீர்த்து கொள்ள வேண்டும் என்று அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். 06.12.2018ல் எனது சகோதரரிகளும் மற்றும் அவர்களின் கணவர்களும் சேர்ந்து வழக்கு சொத்தில் காலிமனையிடத்தில் கூரை போட போவதாக பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல. இதனால் தான் 1ம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையம் சென்றபோது நாங்களே தீர்த்து கொள்ள வேண்டும் என்று சொன்னதால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. இந்த உயில் ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும் நல்ல மனநிலையில் உடல் நிலையில் எனது தாயார் உயில் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. உயில் மூலமாக எங்களுக்கு உரிமை எதுவும் வந்தடையவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் கட்டிடம் கட்ட 1ம் பிரதிவாதி செலவு செய்திருப்பதால் கட்டிடத்தை பொறுத்து உரிமை கொண்டாட எங்களுக்கு அறுகதை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றும் அவர் ஓர் அறையில் மட்டும் இருப்பதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் செலுத்துவதை தவிர்க்க இவ்வாறு பொய் கட்சி செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. எனவே முறையாக தாயரித்து தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. சுவாதீனம் பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் அனுபவத்தை வழக்கு சொத்து இருப்பதால் அவர் கட்டிடம் கட்ட கூடாது எனவும் பரிகாரம் எதுவும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ஆகையால் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

/Signed/
அகிலாண்டேஸ்வரி

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி